www.tamilarangam.net

உதயன்
10 – 02 – 1997

# உள்ளிருந்து கொல்லும் வியாதியால் எமது சமுதாயத்திற்குப் பெரும் அழிவு!

## ஈ.பி.ஆர்.எல்.எவ். அறிக்கை

அன்புடன் தமிழ் மக்களுக்கு!

நீண்ட நாள்களுக்குப்பின் நேரடியாக கருத்துக்களை பகிர்ந்து கொள்ள கிடைத்தமை பெருமகிழ்ச்சிக்குரியதே. 17 வருட ஈவிரக்கமற்ற யுத்தமும் இடையில் தோன்றிய சர்வாதிகாரப் போக்கும் மக்களாகிய உங்களையும் அரசியற்கட்சியை சேர்ந்தவர்களாகிய எங்களையுமே மாத்திரம் பிரித்துவிடவில்லை. உங்களின் உற்றசுற்றம், நண்பர்கள், உடன் பிறந்தவர்கள், தாய் பிள்ளை தந்தை தனயன் எல்லோரையுமே பிரித்துவிட்டது. கவிஞன் வ. ஐ. ச. ஜெயபாலன் தனது கவிதை வரிகளில் கூறியதுபோல 'விதிக்குரங்கு கிழித்தெறிந்த பஞ்சுத்தலையணை' ஆகிவிட்டது எம் வாழ்வு.

1986 இன் இறுதிவாக்கில் புலிகளால் தடைசெய்யப்பட்ட எமது ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களைப் பற்றியும், எப்போன்று தடைசெய்யப்பட்ட சக ஸ்தாபனங்களை சேர்ந்தவர்களைப் பற்றியும் துரோகிகள் என்றுதான் அறிந்திருப்பீர்கள். ஆம், இங்கு நீண்டகாலமாக கோலோச்சியவர்கள் உங்களுக்கு சொல்லி வைத்தது அப்படித்தான். அவர்களின் சொல்லைமீறி தென்மராட்சியிலிருந்தும், கொழும்பிலிருந்தும் திரும்பிவந்தற்காக அந்தத் துரோகிகள் பட்டத்தைத்தான் உங்களுக்கும் சூட்டினார்கள். உங்களுக்கு ஏற்படும் எல்லாச் சிரமங்களுக்கும் நாங்களும் காரணமானவர்கள் என்று கூறப்பட்டது. தெருக்கூத்து உட்பட பல்வேறு பிரசார வடிவங்கள் ஊடாகவும் நாம் அவ்வாறு சித்திரிக்கப்பட்டோம். எல்லாப் பாவங்களையும் சுமப்பவர்களாக நாமும் எம்மைப்போன்ற சக இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் நின்றிருந்தோம்.

''சூரியக்கதிர், 1, 2'' இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து நீங்கள் வேருடன் பெயர்ந்து செல்லும் துரதிர்ஷ்டம் ஏற்பட்டதையிட்டு நாம் மிகுந்த வேதனையும் விரக்தியும் அடைந்தோம்.

### எமது துரதிர்ஷ்டம்

தமிழ்ச் சமுதாயத்தின் உரிமைப்போராட்டத்தில் எமது ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களும், சக ஸ்தாபனங்களைச் சார்ந்தவர்களும் உயிரை அர்ப்பணித்தல் உட்பட சகல விதமான தியாகங்களையும் செய்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். நாம் அரச பயங்கரவாதத்திற்கு எதிராக ஐக்கியப்பட்டு நின்று போராட தயாராக இருந்தவர்கள்; போராடியவர்கள்; ஐக்கியத்திற்காக விசுவாசமாக உழைத்தவர்கள் இன்னும் ஐக்கியத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் ஆனால் எமது துரதிர்ஷ்டம் உள்ளிருந்தே கொல்லும் வியாதி. எமது சமுதாயத்தின் அழிவுக்கு அந்த வியாதி பெரும் பங்களிப்பு வழங்கியது என்பதனை நீங்கள் மறுக்க மாட்டீர்கள்.

அன்பிற்கினிய தமிழ் மக்களே!

நாம் எமது எதிர்காலச் சந்ததியின் சுபீட்சமான மகிழ்ச்சியான வாழ்வுக்காகத் தானே போராடப்புறப்பட்டோம்? ஆனால் 17 வருடங்களின் பின் உறவுகளை இழந்த, பிரிந்த சிதைவுண்ட வாழ்வு ஏன் எமக்கு மிச்சமாக கிடைத்தது? சிந்திக்க வேண்டிய, பதில் காண வேண்டிய கேள்வி இது.

எமது போராட்டத்தில் எங்கேயோ பாரிய கோளாறு ஏற்பட்டு இருக்கிறது. இதனைக் கண்டுபிடிக்கா விட்டால் அல்லது அலட்சியம் செய்தால் மேலும் மேலும் அடிமைத்தளையில் சிக்குண்டு போகவேண்டிய நிலை ஏற்படலாம். யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்த பெண் கவிஞர் சிவரமணி தற்கொலை செய்து கொள்ளு முன் சில காத்திரமான கவிதைகளை எழுதியிருந்தாள். அவற்றில் ஒரு வரி இதுதான் ''நாம் இங்கு வாய் திறப்பதெல்லாம் உண்பதற்கும் குடிப்பதற்கும் மாத்திரம்தான்''. ஆம், உங்கள் சமகால வாழ்க்கை பற்றிய மன அதிர்வுகளை ஏற்படுத்தும் வரி இது.

நாம் தென்னாசியாவில் மெத்தப் படித்தவர்கள் என்று இறுமாந்திருந்தவர்கள் அது ஓரளவு உண்மையும் கூட. ஆனால் நாம் ஒருவரோடு ஒருவர் சுதந்திரமாக — இயல்பாக — பேச முடியாத மனிதர்களாக்கப் பட்டோம். தாயும் பிள்ளையும் கூட மனம்விட்டு பேச முடியாத ஒரு நிலை தோற்றுவிக்கப்பட்டது. ஒரு தனி மனிதனின் சிந்தனைக்கேற்ப நாம் வாழ வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்பட்டோம். ஒரு மிக உயர்ந்த கல்வி, கலாசார, பாரம்பரியத்திற்கு சொந்தக்காரர்களாகிய நாம் எவ்வாறு இத்தகைய ஒரு சர்வாதிகாரத் தனத்திற்கு ஆட்பட்டோம்? ஏன் எம்மால் இதனை எதிர்த்து குரல் கொடுக்க முடியாமல் போனது?

## பகுதி - 1

**அண்மையில் யாழ். நகரில் தனது அலுவலகத்தைத் திறந்துள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது நிலைப்பாடு குறித்து யாழ். மக்களுக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த நீண்ட அறிக்கையின் முதற் பகுதி இங்கு பிரசுரமாகுகின்றது.**

### நீளும் பட்டியல்

எம் ஊரவர் கொல்லப்பட்டார்கள்; நாம்ஏன்என்றுகேட்கவில்லை. எம் அண்டை அயலார் கொல்லப்பட்டார்கள்; நாம் ஏனென்று கேட்கவில்லை. இறுதியில் நாமே அழிவின் விளிம்பில் நிறுத்தப்பட்டிருக்கிறோம். ஏன் என்று கேட்க யாருமில்லை. எத்தனை கண்ணியமான பெறுமதிவாய்ந்த மனிதர்களை நாம் இழந்திருக்கிறோம். யாழ். மருத்துவக் கல்லூரி உடல் கூற்றியல் துறைத்தலைவர் ரஜனி திரணகம, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், பரி.யோவான் கல்லூரி அதிபர் ஆனந்தராசா, யாழ். முன்னாள் அரச அதிபர் பஞ்சலிங்கம், பல்கலைக்கழக மாணவன் விஜிதரன், விடுதலைப் போராளியும் பல்கலைகழக மாணவர் தலைவருமாகிய விமலேஸ்வரன், பெண் கவிஞர் செல்வி இன்னும் எத்தனை சாதாரண பொதுமக்கள், எமது ஸ்தாபனத்தின் தலைவர் பத்மநாபா, ரெலோ இயக்கத்தின் தலைவர் சிறீசபாரத்தினம், புளொட் இயக்க தலைவர்களில் ஒருவரான வாசுதேவா இன்னும் பல நூற்றுக்கணக்கான போராளிகள் எல்லோரையும் காவு கொடுத்திருக்கிறோம். இவர்கள் எல்லோரும் தேசத்துரோகிகளாக அல்லது சமூகவிரோதிகளாக சித்திரிக்கப்பட்டே படுகொலை செய்யப்பட்டார்கள். இந்த படுகொலைகளையெல்லாம் படித்த நாகரிகமான சமுதாயமென்று கூறிக் கொள்ளும் எம் தமிழினம் மௌனமாக எதிர்ப்பு எதனையுமே காட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தது வேதனை தரும் உண்மையாகும். ஆனால்

இந்தக் கொலைப்பட்டியல் நீண்டு கொண்டே இருக்கிறதே தவிர முடிவு கிட்டவில்லை. தற்போதைய அவலமான சூழ் நிலையில் இவையெல்லாம் ஏன் திரும்பப் பேசப்படுவான் என உங்களில் சிலர் நினைக்கக் கூடும்.

### மௌனமாக இருந்தீர்கள்

நாம் யார்மீதும் கொண்ட வெறுப்பிலோ, குரோதத்திலோ இதனை எழுதவில்லை. நாம் மற்றவர்களை சுட்டிக் காட்டமுன் என்ன தவறு செய்தோம் என்று திரும்பிப் பார்க்க வேண்டும். ''நீ மற்றவனின் கண்களில் இருக்கும் துரும்பைப் பார்ப்பதைவிட உன்னுடைய கண்ணில் இருக்கும் விட்டத்தைப் பார்க்க வேண்டும்'' என்று யேசுநாதர் தன் போதனைகளில் குறிப்பிட்டிருக்கின்றார். எனவே எம்மவர் இழைத்த தவறுகளை முதலில் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

ழைத்தவர்களும் தமது
களை திரும்பிப் பா
வேண்டும். இதுவே
இதய சுத்தியான அவா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடூரங்கள் நடந்தபோது மக்களே! நீங்களும் மௌனமாக இருந்துவிட்டீர்கள். அநியாயம் நடக்கும்போது மௌனமாக இருப்பது அந்த அநியாயத்தைவிட கொடுமையானது.

★ இயக்கங்கள் தடைசெய்யப்பட்டபோது மௌனமாக இருந்தீர்கள்.

★ மாற்று இயக்க போராளிகள், தலைவர்கள் குற்றுயிரும் குலையுயிருமாக எரியூட்டப்பட்டபோது மௌனமாக இருந்தீர்கள்.

★ இந்தியாவுடன் எம்மவர்கள் யுத்தத்தை தொடர்ந்தபோது மௌனமாக இருந்தீர்கள்.

★ எம்முடன் ஒன்றாக வாழ்ந்த முஸ்லிம் மக்கள் விரட்டப்பட்டபோது மௌனமாக இருந்தீர்கள்.

இதற்கெல்லாம்மூலகாரணமாக இருந்தவர்கள் இந்தியாவிற்கும் நண்பர்களாக இருக்கவில்லை; முஸ்லிம்களுக்கும் நண்பர்களாக இருக்கவில்லை; தமிழர்களுக்கும். நண்பர்களாகஇருக்கவில்லை; கடைசியாக தமக்கும் நண்பர்களாக இருக்கவில்லை. சென்னையில் நடைபெற்ற தோழர் பத்மநாபா இரங்கல் கூட்டமொன்றில் எம்மிடையே இருக்கும் சர்வாதிகார சக்திபற்றி தமிழகத்தின் பிரபல முற்போக்கு எழுத்தாளர் ஜெயகாந்தன் இவ்வாறுதான் குறிப்பிட்டார். இது இன்னும் பொருந்தக்கூடிய தீர்க்க தரிசனம் மிக்க கருத்து.

## நாமும் தவறிழைத்தோம்

இனிய தமிழ் மக்களே!

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியினராகிய நாங்கள் ஒன்றும் தவறுவிடாதவர்கள் அல்லர். நாங்களும் தவறுகள் இழைத்திருக்கிறோம். குறிப்பாக இந்திய அமைதிகாப்புப் படை இங்கு தரித்திருந்த காலத்தில் தேசிய இராணுவத்திற்கான தொண்டர்களைத் திரட்டுவதில் பலாத்காரமான நடைமுறைகளை கடைப்பிடித்தோம். புலிகளுக்கெதிரான போரில் சில அப்பாவிகளின் இழப்புக்கும் நாம் காரணமாக இருந்திருக்கிறோம். ஆனால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மாகாணசபையை இந்திய அமைதி காப்புப்படை இங்கு தரித்திருக்கும் காலத்திலேயே பலப்படுத்தும் நோக்கத்தில் தேசிய இராணுவத்திற்கு ஆட்களை திரட்ட வேண்டி ஏற்பட்டது. நோக்கம் நல்லதாக இருந்தாலும் அது ஒரு பாரிய தவறு என்பதனை உங்கள்முன் பகிரங்கமாக ஒப்புக்கொள்கிறோம். உங்கள் முன் எமது தவறுகளை கூறுவதற்கு வெட்கப்படவில்லை. ஆனால் நாம் பல வருடங்களாக தீண்டத்தகாதவர்களாக சித்திரிக்கப்பட்டிருக்கிறோம். பாரபட்சம் இல்லாத தொடர்புசாதனங்களோ, வேறு வழிவகைகளோ இல்லாத காலத்தில் சரி எது? பிழை எது? என்று பகுத்துணரமுடியாத நிலை உங்களுக்கு இருந்தது.

மக்களே!

எமக்குள்ள கவலையெல்லாம் இதுதான் பீதியின் நிழலில் ஆளுமைகளை இழந்த நிலையில் உங்களது வாழ்க்கைதான் துயரத்தை ஏற்படுத்துகிறது.

★ பயத்திலிருந்து விடுபட வேண்டும்.

★ சுதந்திரமாக - பட்டவர்த்தனமாக - எவர்க்கும் அஞ்சாமல் கருத்து கூறும் நிலை;செயற்படும் நிலை ஏற்பட வேண்டும்.

ஏன் எம்மைப்பற்றிக்கூட சுதந்திரமாக எம்மிடமே கூறும் நிலை வரவேண்டும். ஆரோக்கியமான சமூக வளர்ச்சிக்கு அது அவசியம்.

இந்தப்போராட்டத்தில் எல்லா இயக்கங்களுடைய செயற்பாட்டிற்கான சுதந்திரமும், நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்று பகுத்தறிவதற்கான சூழ்நிலையும், எல்லாவற்றிற்கும் மேலாக உங்கள் கருத்துச் சுதந்திரமும் காப்பாற்றப்பட்டிருந்தால் தற்போதைய நிலை ஏற்பட்டிருக்காது.

## இருட்டடிப்பும் திரித்துக் கூறலும்

மூடுண்ட நிலையில் அல்லது இரும்புத்திரையிடப்பட்ட நிலையில் வாழ்ந்த உங்களுக்கு வெளியுலக நிகழ்வுகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டன: அல்லது திரித்துக் கூறப்பட்டன. சாதாரண சிங்கள மக்கள் பற்றி உங்களுக்கு உண்மைக்கு புறம்பான கருத்துக்கள் கூறப்பட்டன. பேரினவாதிகள் வேறு; சாதாரண சிங்கள மக்கள் வேறு என்று உங்களுக்கு தெரிவிக்கப்படவில்லை. சிங்களவர்கள் எல்லோருமே கொடியவர்கள் என்றே சித்திரிக்கப்பட்டது பெருவாரியான சிங்கள மக்கள் யுத்தத்தை வெறுக்கிறார்கள். யுத்தத்தின் சுமைகள் அவர்களின் அன்றாட வாழ்க்கையும் அழுத்துகின்றன. யுத்தத்திற்காக வடகிழக்கிற்கு அனுப்பப்படும் தமது பிள்ளைகள் உயிருடன் திரும்ப வேண்டும் என்று உங்களைப்போல் அவர்களும் பௌத்த ஆலயங்களில் உள்ள அரசமரங்களின் கீழ் நேர்த்திகள் வைக்கிறார்கள்.

1988 - 90 காலப்பகுதியில் 25ஆயிரத்துக்குமேற்பட்டசிங்கள இளைஞர்கள் அரச பயங்கரவாதத்தாலும் சட்ட விரோத அரச ஆதரவுக்குழுக்களாலும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிணங்கள் ரயர் மாலைளுடன் வீதிவீதியாக எரிந்திருக்கின்றன; களணி கங்கையில் இவர்களின்பிணங்கள் மிதந்திருக்கின்றன. அவர்களுக்கும் கொடூரங்கள் தெரியும். ஆனால் மக்களின் மரணத்தில் குளிர்காயும் பச்சை இனவாதிகள் தமிழர் விரோத கருத்தை ஊட்டி வருகிறார்கள். சிங்கள மக்கள் பாதுகாப்பு இயக்கம், பூமிபுத்திரா, ஹெலஉறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி, சில பிரபல சிங்கள தினசரிகள் போன்றவை இனவாத விஷம் கக்குகின்றன.

தமிழ் மக்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்படவேண்டும் என்று யுக்திய, ராவய, ஹிர போன்ற பத்திரிகைகள் எழுதுகின்றன பல படித்த பண்புள்ள மனிதர்கள் இதற்காக சிங்கள கிராமங்களில் பிரச்சாரம் மேற்கொள்கின்றார்கள். சில இடதுசாரி அரசியல் தலைவர்களும் முன்னணியில் நின்று செயற்படுகின்றார்கள்.

கிருஷாந்தி, ரஜனி ஆகியோர் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதற்கு எதிராக பெருவாரியான சிங்கள பெண்விடுதலையாளர்களும், முற்போக்கு அரசியல்வாதிகள், மனித உரிமைவாதிகளும் தெருமுனைகளிலும் நீதிமன்ற வாசல்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்துகின்றனர். ஆனால் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொட்டாஞ்சேனையில் வசிக்கும் எம் தமிழ் மக்கள் இத்தகைய விடயங்களில் பங்குபற்றுவது அரிதிலும்அரிதோடு எமது சமுதாயத்தை பயம் ஆக்கிரமித்திருக்கின்றது.

(தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போரிடுவதற்கான நியாயங்கள் இன்னும் தமிழர்களுக்கு உள்ளன

## ஆனால் அது சரியான வழியில் நடத்தப்பட வேண்டும் என்கிறது ஈ.பி.ஆர்.எல்.எவ்.

தமிழ் மக்களே!

எமது அண்டை நாடு இந்தியா. அங்கு வைத்து தோழர் பத்மநாபாவும், முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் படுகொலை செய்யப்பட்டபின் பொதுவாக இந்தியாவும், குறிப்பாக தமிழ்நாடும் வேண்டாத விருந்தாளிகளாக எம்மைக் கருதத் தொடங்கின. சராசரி தமிழ் நாட்டுக்காரர் இப்படித்தான் கருதினர்.

''சிலோன்காரர் நம்பமுடியாதவர்கள்''. — இது இந்திய இராணுவம் வெளியேறிய பின் — ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட பின் — தமிழ் நாட்டில் ஏற்பட்ட அபிப்பிராயமாகும்.

ஒருகாலத்தில் ஈழத்தமிழர்களையும் தமிழ்ப் போராளிகளையும் தோளில் ...வத்து கொண்டாடிய தமிழ் நாட்டு மக்கள் ஏன் இத்தகைய ஒரு அவநம்பிக்கையை ஒரு வெறுப்பு நிலையை அடைந்தார்கள் என்பது பற்றி நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

### எத்தனை இழப்பு?

மக்களே!

இங்கு ஏற்பட்ட ஜனநாயக மறுப்பு, மாற்றுக் கருத்துடையோர் ஸ்தாபனமாகவோ தனிநபராகவோ இருக்க முடியாது. அப்படியானவர்கள் எல்லோரும் துரோகிகள். காட்டிக் கொடுப்போர் என்பதனை அடிப்படையாகக் கொண்டிருந்தது. சாதாரண பகுத்தறிவின் பக்கத்திலிருந்து கேட்கின்றோம். உலகியல் நிகழ்வுகளில் ஒருமனிதனைத் தவிர மற்ற மனிதர்கள் எல்லோரும் கெட்ட மனிதர்களாக இருக்க முடியுமா?

ஸ்தாபனத்தைத் தவிர டீகுதி ஸ்தாபனங்கள் யாவும் சமூகத்திற்கு உதவாதவையாக இருக்க முடியுமா? சிந்தியுங்கள்.

அந்த இயக்கம் தமிழ்மக்களின் விடுதலையின் பெயரால் எத்தனை சிறுவர்களை, சிறுமிகளை, இளைஞர்களை, யுவதிகளை யுத்தத்திற்கு காவு கொடுத்திருக்கின்றது? வாழ்க்கையை பகுத்துணர முடியாத வயதில் எத்தனை சின்னஞ் சிறுசுகள் கருகிப் போயின? எத்தனை பேருடைய உழைப்பு — பொருளாதாரம் — இந்த யுத்தத்திற்காக நாசம் செய்யபபட்டு இருக்கிறது?

இதனை ஒரு வீழ்ச்சி மனோபாவத்திலிருந்து எழுதவில்லை:

போரிடுவதற்கான நியாயங்கள் இன்னும் தமிழர்களுக்கு இருக்கவே செய்கின்றன. ஆனால் அது சரியான வழியில் சத்தியத்தின் பக்கத்திலிருந்து நடத்தப்பட வேண்டும். ஆனால் ஓர் இயக்கம் சமுதாயத்தின் தலைவிதியை நிர்ணயிப்பதாக சமுதாயத்தின் வாழ்க்கை உடைமை எல்லாவற்றிற்கும் அதிபதியாக இருப்பதென்பது சர்வாதிகாரத்தின் கடைசி எல்லையாகத்தான் இருக்க முடியும்.

நாம் இந்த நாட்டில் இரண்டாம் தர பிரஜைகளாகவே நடத்தப்படுகிறோம். நாம் பெரும்பான்மை இன சிங்கள மக்களுடன் சரிசமனாக வாழ விழைகிறோம். நவீன உலகில் பல தேசிய இனங்கள் சமத்துவமாக வாழ்வது பற்றிய கருத்து வலுவடைந்து வருகிறது. ஆனால் நாம் எம்மைவிட எண்ணிக்கையில் சிறுபான்மையினரது உணர்வுகளை மதிக்கவில்லை. எமது சமுதாயத்தின் உணர்வுகளையே மதிக்கவில்லை. அப்படியானால் நாம் எவ்வாறு சுதந்திரமாக வாழ முடியும்? ''வாழு! வாழ விடு!'' என்ற பரந்த தன்மை பெரும்பான்மை இனத்தவர்க்கு மாத்திரம் அல்ல எமக்கும் தேவையான போதனையாகும். விடுதலையின் அர்த்தம் மற்றவர்களுடன் சமதையாக வாழ்வது என்பதே நாம் தமிழ் சமுதாயத்தின் மீதோ பிற சமூகங்களின் மீதோ மேலாதிக்கம் செலுத்துவதற்கு அது தேவை இல்லை.

### யுத்தம் என்ன கிரிக்கெட் ஆட்டமா?

யுத்த வெறியர்களுக்கு யுத்தம் ஒரு கிரிகெட் ஆட்டம் போலாகிவிட்டது. அவர்களில் செத்தவர்கள் அதிகம்; இவர்களில் செத்தவர்கள் அதிகம் என்று மனிதர்களின் மரணங்கள் வெறும் இலக்கங்களாக மாற்றப்பட்டுள்ளன. இடையில் அகப்பட்டு சாகும் சாதாரண மனிதர்கள் பற்றி யாரும் அலட்டிக் கொள்வதில்லை. நாம் மனித உயிரின் விலைமதிப்பற்ற தன்மையை உணர்ந்தாக வேண்டும்.

**தனது அரசியல் நிலைப்பாட்டைத் தெளிவுப்படுத்தி ஈ. பி. ஆர். எல். எவ் விடுத்த அறிக்கையின் முதல் பகுதி நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது. அதன் தொடர்ச்சி இன்று பிரசுரமாகிறது. இறுதிப்பகுதி பின்னர் வெளியாகும்.**

யுத்தத்தில் நேரடியாக ஈடுபட்டு இறப்பவர்கள் தமிழ் சமூகத்தின் சிறுவர், சிறுமியரும், ஏழைச் சிங்கள விவசாயிகளின் பிள்ளைகளுமாவர். இந்தப் பாழாய் போன யுத்தம் —

★ 50 ஆயிரம் உயிர்களை காவு கொண்டு விட்டது.

★ பல்லாயிரக்கணக்கான வீடுகளை உடைமைகளை நாசம் செய்துள்ளது.

★ எமது சமுதாயத்தின் மூலதனம் எனக்கருதப்படும் கல்வியை சீரழித்துள்ளது.

★ எம்மைச் சோதனைச் சாவடிகள் ஊடாகவும் முட்கம்பி வேலிகள், தடுப்புச் சுவர்கள் ஊடாகவும் நடக்க வைத்துள்ளது.

★ போக்குவரத்து வசதிகளற்ற தனித்தனி பிரதேசங்களாக எமது பிரதேசங்களை துண்டித்து எம்மக்களை தனிமைப் படுத்தி உள்ளது.

திறந்த வெளி சிறை போன்ற சூழ்நிலையில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம்.

★ எம்மில் பலரை நோயாளிகளாக — உளவியல்ரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாகியவர்களாக — மாற்றியுள்ளது.

★ பல்லாயிரக்கணக்கான விதவைகளை, அநாதைச் சிறுவர்களைஉருவாக்கி இருக்கிறது.

★ எம்மை நடைபிணங்களாக மாற்றியுள்ளது.

### எங்கள் ஏக்கம்

மக்களே!

இது எப்போது முடிவுக்கு வரும் என்று நீங்கள் ஏங்கு

## பகுதி - 2

கிறீர்கள்.

ஆம், அதுதான் எமது ஏக்கமும் கூட.

யுத்தத்தை இந்த நாட்டின் சராசரி சாமானிய மக்கள் எவரும் விரும்பவில்லை. பிரச்சினைகள் சமாதான வழியில் தான் தீர்க்கப்பட வேண்டும் என்றுபெருவாரியான மக்கள் விரும்புகிறார்கள். உலக அபிப்பிராயம் கூட அதுதான். சமாதான வழிகளில் பிரச்சினைகள் தீர்க்கப்பட முடியாதென நாம் அவநம்பிக்கை கொள்ளத் தேவையில்லை. ஆனால் சமாதானமாக பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அருமையான சந்தர்ப்பங்கள் தவறவிடப்பட்டிருக்கின்றன.

முதலாவது சந்தர்ப்பம் இந்திய- இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட காலகட்டமாகும்.

★ சமஷ்டி அமைப்பு ஏற்படுத்தப்படாவிட்டாலும் வடக்கு - கிழக்கு தற்காலிகமாகவேனும் இணைக்கப்பட்டிருந்தது.

★ திருமலையை தலைநகராக்க முடிந்தது.

இது 10 வருடங்களுக்கு முன்.

தற்போது எமது பிரதேசங்களை எண்ணிப்பாருங்கள். இந்த நிலையை விட அது மோசமாக இருந்திருக்காது.

### ஒற்றுமையுடன் செயற்பட்டிருந்தால்...

நாம் ஒற்றுமையுடன் செயற்பட்டிருந்தால் இந்தியாவிற்கும் ஒப்பந்தத்தில் ஒரு பங்குதாரர் என்ற நிலை இருந்திருக்கும். இந்திய விரோத யுத்தம் நடக்காது இருந்திருந்தால் இந்தியா எப்போதும் பொறுப்புச் சொல்ல வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருந்திருக்கும். ஆனால் அது இல்லாமல் செய்யப்பட்டுவிட்டது.

திரும்பவும் பல இன மக்களது பெருவாரியான ஆதரவுடன் பதவிக்கு வந்த பொது ஜன முன்னணி அரசு தேர்தலுக்கு முன் பேச்சுவார்த்தை சமாதான வழிவகைமூலம் பிரச்சினையை தீர்ப்பேன் என மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால் புலிகள் பேச்சுவார்த்தை நடத்தும்போது தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தீர்வுபற்றி எதுவும் பேசவில்லை. அன்றாட பிரச்சினைகள் பற்றி பேசிவிட்டு திருமலைக் கடல் பகுதியில் கடற்படை மீது தாக்குதல் தொடுத்தார்கள். சர்வதேச சமூகத்தினது பார்வையில் புலிகள் நீதியாக நடந்து கொள்ளவில்லை என்பது விளங்கியது.

பேச்சுவார்த்தை மேசைகளில் புலிகளின் நம்பகத்தன்மை தொடர்பான பிரச்சினை முதலில் இந்தியாவிற்கும், பின்னர் பிரேமதாசா அரசிற்கும், தற்போது பொதுஜன முன்னணி அரசிற்கும், சர்வதேச சமூகத்திற்கும் ஒரு கேள்வியாக உருவெடுத்தது. புலிகள் நம்ப முடியாதவர்கள்; ஒரு பேச்சுவார்த்தையில் நாணயமாக நடந்து கொள்ள மாட்டார்கள். — என்ற அபிப்பிராயம் திட்டவட்டமாக ஏற்பட்டுவிட்டது. புலிகள் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக கிடைத்த முக்கிய இரண்டு சந்தர்ப்பங்களையும் பாழடித்தார்கள்.

(தொடரும்)



www.tamilarangam.net

# மூன்றாவது சக்தி ஒன்றின் தலையீடு இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அவசியம்

## ஈ. பி. ஆர். எல். எவ். விளக்கம்

**தனது அரசியல் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி ஈ.பி. ஆர். எல், எவ். விடுத்த அறிக்கையின் முதல்இருபகுதிகள், நேற்றும்,நேற்று முன்தினமும் உதயனில் வெளியாகியிருந்தன. இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகுகின்றது.**

**பொது**ஜன முன்னணி அரசு ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைத்தது. ஆனால்அந்த யோசனைகள் 1995 ஆகஸ்ட் 3 இல் வைக்கப்பட்டதில் இருந்து செறிவு குறைந்து விட்டது.

ஆகஸ்ட் 3 இல் வைக்கப் பட்ட யோசனைகள் —

★ இலங்கையை பிராந்தியங்களின் ஒன்றியமாக சித்திரித்தது.

★ காணி அதிகாரங்கள், மாகாணத்திற்கு பகிரப்பட்டு இருந்தன.

★ சடுதியாக கலைத்து விடும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கவில்லை.

இது போன்ற விடயங்களைக் கொண்டிருந்த போதும் அது மிக முக்கிய குறைபாடுகளைக் கொண்டிருந்தது. அவை வருமாறு:

★ பிராந்திய அலகு பற்றி குறிப்பிடப்படவில்லை. ஆனால் தற்போதைய மாகாணங்களின் எல்லைகள் மீள்பரிசீலனை செய்யப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

★ பௌத்த மதத்திற்கு சிறப்பிடம் அளிக்கப்பட்டிருந்தது. இது மதசார்பின்மையுடன் முரண்படும் விடயமாகும்.

இதைப்போன்ற குறைபாடுகள் நிறையவே இருக்கின்றன.

எமக்குத் தேவையான அடிப்படை விடயங்கள்:-

அ) வடகிழக்கு இணைப்பு,

ஆ) சமஷ்டி அரசியல் அமைப்பு

### தமிழரின் குரல் பலவீனமடைந்துள்ளது

மக்களே!

இவை இரண்டிலும் உறுதியான நிலைப்பாடு தேவை.

ஆனால் ஏற்கனவே உருவாக்கப்பட்ட நம்பகத்தன்மையற்ற நிலைமைகள், தமிழர் சக்திகளின் ஒருமித்த குரலின்மை, புலிகளின் யுத்தவாதம், கூட்டணியின் தனிப்போக்கு ஆகியன தமிழர்களின் குரலை பலவீனமடையச் செய்துள்ளன. இத்தகைய இக்கட்டான சூழ்நிலையிலும் ஐந்து தமிழ்க் கட்சிகள் — ஈ. பி. ஆர். எல். எவ், புளொட், ரெலோ, ஈரோஸ், ஈ. பி. டீ. பி. ஆகியன — குறைந்த பட்சம் தைத்துப் பேசியாவது செயற்படுகின்றன.

துரதிர்ஷ்டவசமாக, தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான உள்ளார்ந்த ஆற்றலை தமிழ், சிங்கள அரசியல் சக்திகள் இழந்துள்ளன என்றே ஈ.பி.ஆர்.எல்.எவ். கருதுகிறது. அந்த வகையில் மூன்றாவது சக்தி ஒன்றின் தலையீடு அவசியம் என்றும் கருதுகிறது. எந்தச் சர்வதேச சக்தியும் இந்தியாவின் அனுசரணை இல்லாமல் இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்யப் போவதில்லை.

ஆனால் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த வெளிவிவகார அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் இரு நாடுகளுக்கிடையே உள்ள உறவுகளை மேம்படுத்துவதை தவிர உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை எனக் கூறிச் சென்று விட்டார்.

ஆனால் இந்தியா இந்த இனப்பிரச்சினை விவகாரத்தில் தனது தார்மீகப் பொறுப்பை தட்டிக்கழித்து விடமுடியாது என்பதே எமது நிலைப்பாடாகும்.

புலிகளின் நம்பகத்தன்மை தொடர்பான பிரச்சினையே தமிழ் நாட்டில் கலைஞர் போன்ற தலைவர்கள் இனப்பிரச்சினை விவகாரத்தில் தயக்கம் காட்டக் காரணமாகும். அத்தோடு ஏற்கனவே குறிப்பிட்டது போல ராஜீவ்காந்தியின்படுகொலையின் பின்னர் தமிழ் நாட்டில் மக்கள் மத்தியில் ஏற்பட்ட அதிருப்தியும், தி. மு. க. போன்ற முக்கியமான அரசியல் கட்சிகளுக்கு ஏற்பட்ட சங்கடமான நிலைமைகளும் கலைஞரின் தற்போதைய நிலைப்பாட்டிற்குக் காரணமாகஇருக்கின்றன.

### மூன்றாவது சக்தியின் தலையீடு அவசியம்

மக்களே!

எது எப்படி இருந்த போதும் மூன்றாவது சக்தியின் தலையீடு இல்லாமல் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சாத்தியம் இல்லை. எனவே சகல உள்ளூர்ச் சர்வதேச மட்டங்களிலும் மூன்றாவது சக்தியின் மத்தியஸ்தத்தை வலியுறுத்தி வருகிறோம். ஸ்கண்டிநேவிய, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடமும் இது பற்றி ஐந்து தமிழ் கட்சிகளும் எடுத்துரைத்துள்ளன. குறிப்பாக இந்தியாவின் நிலைப்பாட்டில் மாறுதலைக் கொண்டு வருவதற்காக தமிழ் நாடு மற்றும் டெல்லி மட்டத்தில் பல்வேறு தரப்பினருடனும் பேசி வருகிறோம். தவிர தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பான கருத்தரங்குகளை தமிழ், சிங்களப் புத்திஜீவிகள், மனித உரிமைவாதிகள் மற்றும் முற்போக்காளர்களை அழைத்து வடக்கு கிழக்கிலும் கொழும்பிலும் நடத்தி வருகிறோம். அத்தகைய கருத்தரங்குகள் யாழ்ப்பாணத்திலும் நடத்தப்பட வேண்டும்.

மக்களே! அறிவும் ஆற்றலும் மிக்க உங்களின் ஆலோசனைகள், அபிப்பிராயங்கள் தமிழ்மக்களின் சுயமரியாதை கௌரவத்தை நிலைநாட்டக் கூடிய தீர்வை உருவாக்குவதில் அவசியமானவை. எனவே நீங்கள் உங்கள் கருத்துக்களை முன்வைப்பதற்கு பின் நின்று விடாதீர்கள். அதற்குரிய ஏற்பாடுகளை எம்மால் இயன்ற வரை செய்து தருகிறோம்.

பல்வேறு நாடுகளும் அடுத்த நூற்றாண்டில் சவால்களைச் சந்திக்க தயாராகிக் கொண்டிருக்கும் போது நாம் பின் தங்கிவிடக் கூடாது. நவீன உலகில் ஆண்டாண்டு காலமாக யுத்தம் நடாத்திய நாடுகள், இனங்கள் பேச்சுவார்த்தை, மற்றும் இணக்கப்பாடு மூலம் தீர்வு காண முற்பட்டிருக்கின்றன. சில வெற்றியும் பெற்றிருக்கின்றன. மிகப் பிரபலமான உதாரணம்தென்னாபிரிக்கா.

★ தென்னாபிரிக்கா கடைசியில் அதன் உண்மையான சொந்தக்காரர்களான கறுப்பு இன மக்களிடம் போனது.

★ பலஸ்தீனம் ஜெரிக்கோவிலும், காசாவிலும் அமைந்து விட்டது. ஏனைய பிரதேசங்கள் பிரச்சினைகள் தொடர்பாக பேச்சுவார்த்தைகள் ஆக்க பூர்வமான வழிகளில் தொடர்ந்து நடைபெறுகின்றன.

★ பல ஆண்டுகளாகப் போராடிய பிலிப்பீன்ஸின் தென்பகுதி முஸ்லிம்கள் வடபகுதி கிறிஸ்தவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு தமக்கென சமஷ்டி அமைப்பொன்றை நிறுவிஉள்ளார்கள்.

## பகுதி - 3

உலகம் சுருங்கிவருகிறது பல்வேறு மொழி, இன மக்கள் தங்களிடையே இறுக்கமான தொடர்பை ஏற்படுத்தி வருகிறார்கள். ஆனால் நாம் தூய இனம் பற்றியே பேசி தனிமைப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

### நாட்டுக்குள் அவலம்

எமது மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கை சின்னாபின்னப்படுத்தப்பட்டிருக்கிறது. மீனவரில் பெரும்பாலானோர் கடலுக்குச் சென்று எவ்வளவோ காலமாகிவிட்டது. எமது வயல்கள் கைவிடப்பட்டு எவ்வளவோ காலமாகிவிட்டன. எதிரும் புதிருமான ஆயுத சக்திகளால் துண்டிக்கப்பட்டு பல்வேறு இன்னல்களை அனுபவிக்கிறோம். உங்களில் ஒரு பகுதியினர் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் இருப்பதற்கு வீடு இல்லாமல் பாடசாலைகளிலும், தெருவோரங்களிலும் மரங்களின் கீழும் நாடோடி போல் வாழ்கிறார்கள். அரசு கட்டுப்பாட்டிலுள்ள வவுனியா நகரிலோ பாடசாலைகளிலும் தனியார் கட்டடங்களிலும் மக்கள் [illegible] பெறுவதிலும் முற்றுகையிலிருந்து மீள்வதிலும் சோதனைச்சாவடிச்சிரமங்களை அனுபவிப்பதிலும் எங்கள் நாளாந்த வாழ்க்கை நரகமாகக் கழிகிறது.

### நாட்டைவிட்டு ஓடுவோர் அவலம்

நாட்டை விட்டு எங்காவது கண்காணாத இடத்திற்கு ஓடிவிட எத்தனித்தவர்கள் கப்பல்கள் தாண்டு கருங்கடலிலும், விமானங்கள் விழுந்து மத்திய தரைக்கடலிலும், கிழக்கு ஐரோப்பிய எல்லைகளைத் தாண்டுகையில் வாகனங்களில் மூச்சடங்கியும் இறந்து போன சோக சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன: அண்மைக் காலத்தில் இத்தகைய சம்பவங்கள் மிக அதிகமாகவே நடந்திருக்கின்றன. கள்ளச் சந்தைக் காரர்கள், கள்ளக் கடத்தற்காரர்கள், ஆள் கடத்தல் காரர்கள், போதை வஸ்து வியாபாரிகள், ஆயுத வியாபாரிகள் ஆகிய பேர் வழிகளுக்கு இந்த யுத்தம் வரப்பிரசாதமாக அமைந்ததென்றால் அது மிகையல்ல. இந்த யுத்தம், யுத்தத்தை சார்ந்து சம்பாதிக்கும் ஒரு பகுதியினரை நாட்டுக்குள்ளும், வெளிநாடுகளிலும் உருவாக்கியுள்ளது. தவிர மேற்கத்திய நாடுகளில் வசிக்கும் எம்மவர்களில் ஒரு பகுதியினரும் யுத்தம் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்றே விரும்புகிறார்கள். அது அந்த நாடுகளில் அவர்களின் இருப்பை உறுதி செய்யும். இந்த யுத்த பூமியில் கொஞ்சம் கொஞ்சமாக இறந்து கொண்டிருக்கும் மக்களைப் பற்றி அவர்கள் சிறிதும் கவலை கொள்வதில்லை.

தற்போதைய சூழ்நிலையிலிருந்து விடுபடுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? அரசியல் தளத்திலும், சமூகத்தளத்திலும் ஒற்றுமையுடன் செயற்பட்டாக வேண்டும். விரிவான அளவில் கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழ் மக்களின் சுயமரியாதை, கௌரவத்தை உறுதிசெய்ய ஒரு யதார்த்தமான தீர்வுக்காகவும் எமது பூமியில் சமாதானம், ஜனநாயகம், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் இவையெல்லாம் அவசியம். இதுதான் ஈ.பி. ஆர்.எல்.எவ் வின் நிலைப்பாடு.

எமது கருத்துக்கள் நிலைப்பாடுகள் பற்றி உங்களுக்கு உடன்பாடு, மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்கலாம். அவற்றை எமக்கு நேரடியாகவோ, எழுத்து மூலமாகவோ தெரிவித்தால் நாம் எமது கருத்துக்களை செழுமைப்படுத்துவதற்கும், மறுசீரமைத்துக் கொள்வதற்கும், தகுந்த முறையில் செயற்படுவதற்கும் உதவியாக இருக்கும். ★